

# Berthold of Calabria
# March 28

மார்ச் 28

## புனித பெர்த்தோல்ட் (-1159)

பலஸ்தினாவை மீட்க புனித பெர்னர்து வீரர்களை திரட்டிக் கொண்டிருந்தார். இவர் அவர்களோடு சேர்ந்தார் போரின் போது இவர் சாவிலிருந்து தப்பித்தார். இதற்கு நன்றியாக இவர் ஓர் இடத்தில் போய் தனிவாழ்வு நடத்தி வந்தார். அங்கு வேறு பல வனவாசிகளும் இருந்தனர். இவருடைய சகோதரர் அந்தியோக்கியா நகரில் பிதாப்பிதாவாகவும் பாப்புவின் பிரதிநிதியாகவும் இருந்தார். அவரது விருப்பத்துக்குக் கீழ்ப்படிந்து இவர் ஒரு சந்தியாச சபையை ஏற்படுத்தினார். அந்த சபை தேவ தாயின் பாதுகாப்பில் வைக்கப்பட்டது. இவரையே சந்நியாசிகளின் தலைவராக்கினார்கள்.

**சிந்தனை:**

கடவுள் நம்மை அநேக பேராபத்துகளிலிருந்து தப்புவித்திருக்கிறார். இதற்காக கடவுளுக்கு நாம் அடிக்கடி நன்றி செலுத்தி கைம்மாறாக ஏதாவது செய்ய வேண்டும்.

**செபம்:**

ஆண்டவரே, நாங்கள் உமக்கு ஒரு போதும் நன்றி மறவாதிருக்க தயை செய்யும்.